**DEPOSITION OF WITNESS**

**( Chapter XXIII Code of Criminal Procedure )**

**--**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.**

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | CC No.198/2024 | அரசுத்தரப்பு சாட்சி | P.W.2 |
| பெயர் | கார்த்திகேயன் | கிராமம் | |
| தந்தை பெயர் | வடிவேல் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed by Thiru.S.Krishnan, Grade –II Bench Clerk of this Court in accordance with the provisions of Act X of 1873. Dated: 02.06.2026

As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1– Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.
Aadhar card of the Witness verified.

எதிரி ஆஜர். எதிரித்தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் மச்சுவாடியில் குடியிருந்து வருகிறேன். எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. யார் சாலை விபத்தில் காயம்பட்டு இறந்து போனார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியானவர் அரசு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam' 2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தபோது கடந்த 12.07.2023 தேதியில் காலை சுமார் 9.30 மணியளவில் நான் என்னுடைய சொந்தவேலையின் காரணமாக புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் சத்தியமூர்த்தி சாலையில் உள்ள பழைய கிங்ஸ் பேக்கரி அருகில் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி

என்னுடைய இரு சக்கர வாகனத்தில் நான் சென்று கொண்டிருந்தேன் என்றும் அப்போது எனக்கு முன்னால் அதே திசையில் ரோட்டின் இடது ஓரமாக சௌந்தரராஜன் என்பவர் நடந்து சென்று கொண்டிருந்தார் என்றும் அப்போது அவருக்கு பின்னால் வந்த TN 55 BU 5801 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் இரு சக்கர வாகனத்தை ஓட்டி சென்ற இவ்வழக்கின் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து நடந்து சென்ற சௌந்தரராஜன் மீது மோதியதில் சௌந்தரராஜன் தூக்கி எறியப்பட்டு நடுரோட்டில் கீழே விழுந்துவிட்டார் என்றும் நானும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி சென்று தூக்கி பார்த்தபோது அவருக்கு வலது கால் முட்டியில் சிராய்ப்பு காயமும்,இடது கண்ணில் வீக்கமும், தலையில் காயம்பட்டு வீக்கம் இருந்தது என்றும் உடனடியாக 108 ஆம்புலன்ஸை வரவழைத்து புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி கேட்டுக்கொண்டதால் அவரை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– கார்த்திகேயன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.